


டியூப் கார்கள் என்று சொல்லப்படும் அந்த ஜப்பானிய சுரங்க ரயில்களில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல், ஒரு வகையில் ஜப்பானிய சரித்திரத்தில் இடம்பெறத் தகுந்தது. இரண்டாம் உலகப்போரில், அமெரிக்க அணுகுண்டு வீச்சுக்கு அப்புறம் ஒரு பேரழிவுக் காண்டத்தை ஜப்பானியர்கள் சந்தித்தது, கடந்தது அப்போதுதான்.

இப்படியே ஊர் ஊராக செரீன் விளையாட்டு விளையாடி, ஜப்பான் அரசை நிலைகுலையச் செய்து சரணடைய வைத்துவிடலாம் என்று ஓம் இயக்கம் நினைத்தது. அந்த விஷ வாயு ஸ்டாக் தீர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்ளச் சொல்லி ஆய்வுச் சாலைக்குக் குறிப்பு அனுப்பப்பட்டது. எவ்வளவு வேண்டியிருக்கும் என்று தெரியாது. எத்தனை நாளைக்கு வேண்டியிருக்கும் என்றும் தெரியாது. ஜப்பானிய அரசுடனான யுத்தம் தொடங்கிவிட்டது. அது முடியும்வரை செரீன் தேவதை அனுக்கிரகம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும்.

அசஹாராவுக்கு அப்போதும் நம்பிக்கை இருந்தது. கண்டிப்பாகக் கண்டுபிடிக்க முடியாது! மிஞ்சிப்போனால் தீவிரவாதத் தாக்குதல் என்று தெரியும். ஆனால், யார் பரப்பிய வாயு என்று எப்படித் தெரியும்? ஒரு துப்பாக்கிச் சூடு என்றால் கூட, வெடித்த தோட்டாவைத் தேடி, எடுத்து ஆராய்ந்தால் என்ன ஜாதி, எந்தக் குலம், கோத்திரம் என்று கண்டுபிடித்துவிட முடியும். ரசாயன ஆயுதத்தில் அதெல்லாம் எப்படிச் சாத்தியம்?

சந்தேகத்தின் பேரில் விசாரணை என்று வேண்டுமானால் வரலாம். அதுகூட மிகவும் அசாத்தியம். அப்படி வந்தால், ஆசீர்வாதம் வழங்கி அனுப்பிவிட வேண்டியதுதான்.

யுத்தம் என்று தீர்மானித்துவிட்டபடியால், இயக்கத்தவர்களின் மற்ற நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்திக் கொள்ளச் சொல்லிவிட்டார் அசஹாரா. 'கவனமாக இருங்கள். ஆர்ப்பாட்டம் வேண்டாம். யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது. பொது இடங்களில் சகஜமாக இருங்கள். ஆடு திருடிய கள்ளன் மாதிரி முழிக்காதீர்கள். வலுச் சண்டைகள் எதிலும் ஆர்வம் காட்டாதீர்கள். வம்பு வழக்குகளின் பக்கம் போக வேண்டாம். யுத்தம் முடிகிறவரை சட்டத்துக்கு உட்பட்ட பிரஜைகளாகவே இருப்பது நலம் பயக்கும். முடிந்தால், ஆசிரமத்திலேயே தங்கிவிடுங்கள். வீடு வாசல் கொஞ்ச நாளைக்கு வேண்டாம். இருக்கவே இருக்கிறது நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க ஜபம். அதனைப் பண்ணிக்கொண்டு ருத்திராட்சம் உருட்டிக் கொண்டிருங்கள். போதும். வெற்றி நம்முடையதுதான்.'

அதேசமயம், உளவுத்துறை அதிகாரிகளில் சிலர், ஜப்பான் முழுதும் பரவியிருந்த ஓம் இயக்கத்தின் ஆசிரமங்களின் வரைபடங்களை எடுத்து வைத்து, மஞ்சள் நிற ஹைலைட்டரால் மார்க் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

தயங்க வேண்டாம். கண்டிப்பாக இவர்களைத் தவிர, வேறு யாருக்கும் இத்தனை துணிச்சல் வர வாய்ப்பில்லை. நீண்ட நெடுங்காலமாக சந்தேக லிஸ்ட்டில் இருக்கிறவர்கள். நடவடிக்கைகள் எதுவும் வெளிப்படையாக இல்லை. நாலைந்து வருடங்களில் எத்தனை வழக்குகள்! எத்தனை விசாரணைகள்! எத்தனை குற்றச்சாட்டுகள்! இன்றுவரை அரசாங்கமும் காவல் துறையும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத நிறுவனம் ஒன்றை விசாரணைக்கு உட்படுத்துவதால் வரக்கூடிய சிக்கல்கள் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது போதும்.


தேடுதல் வேட்டையில் ஒரு காவலர்...

அதிரடியாகக் களமிறங்க வேண்டிய தருணம் இது. எதற்கும் பிற மத அமைப்புகளையும் விசாரிப்பது போல் ஒரு பாவ்லா காட்டிவிடலாம். ஓம் ஷின்ரிக்கியோவை பார்ட் பார்ட்டாகக் கழற்றி மேய்ந்துவிட வேண்டும்.

உளவுத்துறை சீனியர்கள் கூடிப்பேசினார்கள். ஓம் ஆசிரமங்களில் ஒரு ரெய்டு போவது அவசியம்தான் என்றே அனைவரும் நினைத்தார்கள். எதிர்ப்புத் தெரிவித்த அதிகாரிகளுக்கு புரமோஷன் கொடுத்து வேறு டிபார்ட்மெண்டுக்கு அனுப்பிவிட்டு, ரகசியமாக ஒரு தனிப்படை தயாரித்தார்கள். மிகக் கவனமாக, காதும் காதும் வைத்த மாதிரி வேலையை முடிக்க முடிவு செய்தார்கள்.

அப்போது, அவர்களுக்கு ஒரு ரகசியத் தகவல் வந்து சேர்ந்தது. சுரங்கப்பாதை விபத்திலிருந்து காவல் துறை மற்றும் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக மத்திய டோக்கியோவில் வேறொரு தாக்குதலுக்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதே அது. அதே போன்ற செரீன் தாக்குதல். ஆனால், இம்முறை டியூப் கார்கள் அல்ல. பேருந்துப் பாதை.

உளவுத்துறை அதிகாரிகள் பலருக்கே அப்போதுதான் விஷயம் தெரிந்தது, உளவுத்துறையைச் சேர்ந்த ஆபீஸர் ஒருவருக்கே மொட்டை அடித்து காஷாயம் கட்டி ஓம் ஆசிரமத்தில் வேவு பார்க்க அனுப்பியிருந்த விஷயம்.

க்ரேட் என்று சிலிர்த்துக்கொண்டு எழுந்தது படை. உடனடியாகத் தகவலை பாதுகாப்புத்துறை அமைச்சகத்துக்குத் தெரியப்படுத்தினார்கள். அது நட்ட நடுநிசி நேரம். பாதித் தூக்கம் அல்லது பாதி விழிப்பில் செய்தியை வாங்கிக் கொண்டு, தண்ணீரை வாரி முகத்தில் அடித்துக் கொண்டு அமைச்சர் வீட்டுக்கு ஓடினார்கள்.


ரெய்டுக்குப் போன காவலர்கள்...

விஷயத்தின் தீவிரமும் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. உடனடியாக டோக்கியோ நகரக் காவல் துறை ஆணையர் எழுப்பப்பட்டார். இரவோடு இரவாக நகரம் முழுதும் உள்ள ஓம் ஆசிரமங்களுக்குத் தலா இருபது போலீஸ் அதிகாரிகளை அனுப்பச் சொல்லி உத்தரவானது. டோக்கியோவுக்கு வெளியே தேசமெங்கும் பரவியிருக்கும் கிளைகளுக்கும் அவ்வண்ணமே காவல் படைகள் அனுப்பப்பட்டன. உளவுத்துறையின் ஆலோசனையின் பேரில், இந்தக் காவல்படைகளுடன் ஒரு விஞ்ஞானியும் அனுப்பப்பட்டார்.


ஏப்ரல் இரண்டாம் தேதி அதிகாலை இந்த ஆபரேஷன் தொடங்கியது. ஃப்யூஜி மலையின் அடிவாரத்தில் இருந்த கமிகுஷிகி என்கிற இடத்தில் இயங்கிக்கொண்டிருந்த ஓம் தலைமையகத்தை இருபத்திரண்டு பேர் கொண்ட காவல் படை சுற்றி வளைத்தது.

விசாரணை அதிகாரியிடம் காவலாளி, 'என்ன வேண்டும் உங்களுக்கு?' என்று கேட்டான்.

'உங்கள் தலைவரைப் பார்க்கவேண்டும். ஒரு விசாரணைக்காக வந்திருக்கிறோம்.'

'குருஜி உறங்கிக் கொண்டிருக்கிறார். நீங்கள் விடிந்ததும் வரலாம்.'

அவனை அலேக்காகத் தூக்கி போலீஸ் வேனில் போட்டுவிட்டு, கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனது படை. காவலுக்கு இருந்த செயல்வீரர்களுக்கு அபாயம் உறைத்தது. உடனடியாக இண்டர்காம் மூலம் உள்ளே சயன அறையில் இருந்த ஷோகோவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.



ஓம் தயாரித்த சேரின் விஷவாயு தொழிற்சாலையின் வரைபடம்...

'காவலர்கள் நம் நண்பர்கள். விசாரணை செய்ய வந்தால், உள்ளே விடவேண்டியதுதானே?' என்று அசால்ட்டாகப் பேசியபடி எழுந்து வெளியே வந்தவரை மடக்கி, அப்படியே உட்கார வைத்தார்கள் அதிகாரிகள். உடனடியாக ஆசிரமத்தின் கதவுகள் இழுத்துப் பூட்டப்பட்டன. உள்ளே டெலிபோன் ஒயர்கள் பிடுங்கப்பட்டன. உள்ளிருந்து வெளியிலோ, வெளியிலிருந்து உள்ளுக்கோ ஒரு கொசு கூட வரமுடியாதபடி செய்துவிட்டு, ஷோகோவின் கழுத்தில் துண்டு போட்டார்கள்.

'இதோ பார், இங்கே ரெய்டு நடக்கப்போகிறது. உன் ஆட்கள் ஒத்துழைக்காவிட்டால் நடக்கிற கதை அவ்வளவு நன்றாக இராது. கூப்பிட்டுச் சொல்.'

ஷோகோவுக்கு அடிவயிற்றைக் கலக்க ஆரம்பித்தது. தான் அவசரமாக டாய்லெட் போகவேண்டும் என்று சொன்னார்.

'அதெல்லாம் சான்ஸே இல்லை. இப்படியே ஒரு மூலையில் உட்கார்ந்து போய்க்கொள்' என்று சொல்லிவிட்டார்கள்.

'நீங்கள் தவறாக எதையோ கேள்விப்பட்டு இங்கே வந்திருக்கிறீர்கள். உட்காருங்கள். முதலில் டீ சாப்பிட்டு விட்டுப் பிறகு பேசலாம்.'

வாய மூட்றா சோம்பேறி என்று சொன்னார்களா என்று தெரியவில்லை. ஆனால், ஒரு தனியறையில் ஷோகோவைத் தூக்கிப் போட்டு காவலுக்கு ஓர் ஆளையும், ஒரு நாயையும் வைத்துவிட்டு, மற்ற அறைகளில் தேடத் தொடங்கினார்கள். எதிர்ப்புத் தெரிவித்த ஆசிரம ஊழியர்கள் அத்தனை பேரையும் குண்டுக்கட்டாகத் தூக்கி ஜீப்பில் போட்டார்கள்.

எப்படியாவது தனது ஆய்வகத்துடன் தொடர்புகொண்டுவிட வேண்டுமென்று ஷோகோ முயற்சி செய்து பார்த்தார். ம்ஹூம். ஒரு போனும் வேலை செய்யவில்லை. கண்ணுக்கெட்டிய இடங்களிலெல்லாம் காவலர்கள் மட்டுமே இருந்தார்கள். ஒரு தொண்டன்? ஒரு குண்டன்? ஒரு பக்தை? ஒரு சிஷ்யை?

ம்ஹூம்!

'நீங்கள் அத்துமீறுகிறீர்கள். விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என்று எச்சரிக்கிறேன்' என்று சொல்லிப் பார்த்தார்.

சர்தாம் போடா என்று சொல்லிவிட்டார்கள். ஒவ்வொரு அறையாகத் தேடினார்கள். கட்டில், பீரோ, நாற்காலி, மேசைகள், இழுவறைகள், சீலிங், தரை, பாத்ரூம், டாய்லெட், கிச்சன் எதையும் விட்டுவைக்கவில்லை. இழுக்க முடிந்ததை இழுத்துப் பார்த்தார்கள். திறக்க முடிந்ததைத் திறந்து பார்த்தார்கள். உடைக்க வேண்டியதை உடைத்தும் பார்த்தார்கள்.

ஆசிரமத்து நந்தவனத்தின் நடுவே ஷோகோ ஓய்வுப் பொழுதுகளில் சயனக் கோலத்தில் ஒயிலாக சொற்பொழிவாற்றும் ஒரு சிறு குடிலின் கூரையைக் கழற்றிக் கடாசிவிட்டு உள்ளே குதித்துத் தேடியதில், அங்கே ஒரு நிலவறை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

'தோபார்றா' என்று உள்ளே இறங்கினார் ஒரு ஆபீஸர். கிட்டத்தட்ட இராக்கில் சதாம் உசேன் பதுங்கியிருந்த நிலவறை போன்ற அறை அது. உள்ளே வரிசையாக மரப்பெட்டிகள் இருந்தன. துணியில் சுற்றி மூட்டை மூட்டையாகவும் சில வஸ்துக்கள் இருந்தன.

எடுத்துப் பிரித்துப் பார்த்தவர்கள், அரண்டுபோனார்கள்.



சப்வே தாக்குதலில் தேடப்பட்ட குற்றவாளிகள்

அத்தனையும் குண்டுகள். கையெறி குண்டுகள். தவிரவும் பாறைகளைப் பெயர்க்க உபயோகிக்கப்படும் ஜெலட்டின் குச்சிகள். இன்னொரு பெட்டியில் புத்தம்புதிய ஏகே 47 ரகத் துப்பாக்கிகள். மற்றொன்றில் குவித்துவைத்த கரப்பான்பூச்சிகளாகக் கைத்துப்பாக்கிகள். ரவைகள். தனியே கண்டெய்னர்களில் பல்வேறு ரசாயனங்கள். சிறு குடுவைகளில் ஆந்த்ராக்ஸ்.

சஞ்சீவி மலையைப் பெயர்த்த ஆஞ்சநேயர் மாதிரி காவல்துறை அதிகாரிகள் அந்த அறையை அப்படியே சுருட்டி வாரி எடுத்துக்கொண்டு போனார்கள்.

கிட்டத்தட்ட அதே சமயத்தில், ஜப்பான் முழுவதும் இருந்த ஷோகோவின் அனைத்து ஆசிரமக் கிளைகளும் அதே போன்ற சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பெட்டி பெட்டியாகப் பல நாட்டு கரன்சிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தத் தேடுதல் வேட்டையின் உச்சம், ரஷ்யத் தயாரிப்பான Mi - 17 ரக ஹெலிகாப்டர்கள் கைப்பற்றப்பட்டதுதான்.

காடுகளை ஒட்டிய கிராமப்பகுதிகளில் ஹெலிகாப்டர்களை நிறுத்தி வைக்கோல் போரால் மூடியிருந்தார்கள்! விசுவாசமான கிராமத்து விவசாயிகள் அவற்றுக்குக் காவல் தெய்வமாக இருந்தனர். போலீஸ் இந்தத் தேடுதல் வேட்டையில் பல கிராமங்களையே மொத்தமாகச் சலித்து சல்லடை போடவேண்டியதானது.

டன் கணக்கில் கைப்பற்றப்பட்ட கெமிக்கல்கள், குடுவை குடுவையாக அகப்பட்ட ஆந்த்ராக்ஸ் கிருமிகள் அனைத்தும் உடனடியாக அரசாங்க ஆய்வுச் சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஓம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரையும் வூடு கட்டி வளைத்துப் பிடித்தார்கள். விசாரணையில் தெரிய வந்த தகவல்களின் அடிப்படையில், அவர்களது ஆய்வுக்கூடங்கள் இருக்கும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டன. உள்ளே ஆயுதங்கள் மட்டுமல்ல. LSD என்ற போதைப்பொருளும் ஏராளமாகச் சிக்கியது மட்டுமல்லாமல், பாளம் பாளமாகத் தங்கக் கட்டிகள். வைரக் கற்கள். விமான எரிபொருளாகப் பயன்படும் ஒயிட் பெட்ரோல் பேரல்கள்.

இன்னதுதான் என்றில்லாமல் ஷோகோ சாமியார் சகட்டுமேனிக்கு என்னென்னவோ செய்து வைத்திருந்ததைக் கண்டு திகைத்துப் போனார்கள்.

இந்தச் செய்தி, மறுநாள் காலை பேப்பரில் வந்தபோது, கூடவே ஷோகோவின் அறிக்கை ஒன்றும் வெளியானது. அதைப் படித்துப் பார்த்து, 'அடங்கொக்கமக்கா' என்று மூக்குமேல் விரல் வைத்தது காவல் துறை.